**செய்தி வெளியீடு எண்: 64** **நாள்: 27.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

தமிழகத்தில் விவசாய விளைப் பொருட்களின் உற்பத்தியினை அதிக அளவு பெருக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

வேளாண் துறையில் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்கும் வகையில், தொடக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் இயந்திரங்கள் வழங்குதல், நுண்ணீர் பாசனத்திற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல், விவசாய விளைப் பொருட்களை சேமிக்க கிடங்குகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் அமைத்தல், அதிக அளவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் விருது வழங்குதல், உழவர் பாதுகாப்புத் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை விவசாயிகளின் நலனுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன் பயனாக, உணவு தானிய உற்பத்தியில் சாதனை படைத்தற்காக 2011-12 ஆம் ஆண்டிற்கான 'கிரிஷி கர்மான்' விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு பெற்றுள்ளது.

விவசாயத்தில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்கும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நவீன இயந்திரங்கள் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு அதிக அளவில் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்க வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண்மை பயிற்சி நிலையத்தில் இரண்டாண்டு வேளாண்மை பட்டயப் படிப்பினை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் தொடங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பழுதுபார்க்கவும், பராமரிக்கவும், போதிய அனுபவமின்மையினால், அவைகளை அதிக அளவில் பயன்படுத்த விவசாயிகள் தயங்குகின்றனர். இதற்கு நன்முறையில் தீர்வு காண, ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் பல்வேறு வேளாண் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும், பயிற்சி அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி இந்த ஆண்டு வேளாண் பொறியியல் துறை மூலம் 300 கிராமப்புற இளைஞர்களுக்கு பல்வேறு வகையான விவசாய கருவிகளை இயக்குதல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சி வகுப்புகள் கோயம்புத்தூர், மதுரை, வேலூர், திருச்சி, திருவாரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 6 வேளாண்மைப் பொறியியல் துறை பணிமனைகளில் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு பணிமனையிலும் 50 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதன்படி 300 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். இதற்காக 42.90 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

விவசாயப் பயிர்களின் உற்பத்திக்கு இன்றியமையாதது நீர்பாசன வசதியாகும். நீர்பாசன வசதியை மேம்படுத்துவதற்காக பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் ஏற்கெனவே வைகை பாசனப்பகுதி, குடகனாறு நீர்தேக்கம், வரதமாநதி நீர்தேக்கம் மற்றும் காளிங்கராயன் அணைக்கட்டு ஆகிய திட்டப் பாசனப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் வயல்வாய்க்கால்கள் அமைக்கும் பணிகள், சுழற்சி முறை பாசனம் வழங்கும் பணிகள், நில ஆய்வு, பாசன சபைகளுக்கு ஒருமுறை செயல்பாட்டு மானியம் வழங்குதல், பயிற்சி மற்றும் திட்டக் கருத்தரங்கள் நடத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தினை மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தும் நோக்கத்துடன் விழுப்புரம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலுள்ள மணிமுக்தா நதித்திட்டம், பிலாந்துரை அணைக்கட்டு, செய்யாறு அணைக்கட்டு ஆகிய திட்டப் பாசனப் பகுதிகளில் 2012-13 முதல் 2015-16 வரையிலும், எல்லீஸ் அணைக்கட்டுத் திட்டம் 2012-13 முதல் 2014-15 வரையிலும் செயல்படுத்தப்படும். மணிமுக்தா நதி, பாசன வசதி மற்றும் நீர்மேலாண்மை திட்டத்தினை 16,131 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் 46 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கும், பிலாந்துரை அணைக்கட்டு பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டத்தினை 6,985 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் 20 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கும் எல்லீஸ் அணைக்கட்டு பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டத்தினை 5,232 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் 13 கோடியே 56 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கும், செய்யாறு அணைக்கட்டு பாசனப்பகுதி மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டத்தினை 7,952 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் 18 கோடியே 2 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்துவதற்கும் ஆக மொத்தத்தில் இந்த திட்டத்தினை செயல்படுத்த 99 கோடியே 3 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் மொத்தத்தில் 36,300 ஹெக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

இந்தத் திட்டத்தினை, இந்த ஆண்டு முதற்கட்டமாக 3,200 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் செயல்படுத்த மணிமுக்தா நதி திட்டத்திற்கு 6 கோடியே 52 லட்சம் ரூபாயும், 2,400 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் செயல்படுத்த பிலாந்துரை அணைக்கட்டு திட்டத்திற்கு 4 கோடியே 89 லட்சம் ரூபாயும், 2,400 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் செயல்படுத்த எல்லீஸ் அணைக்கட்டு திட்டத்திற்கு 4 கோடியே 89 லட்சம் ரூபாயும், 2,400 ஹெக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் செயல்படுத்த செய்யாறு அணைக்கட்டு திட்டத்திற்கு 4 கோடியே 89 லட்சம் ரூபாயும் ஆக மொத்தத்தில் 21 கோடியே 19 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் இந்த ஆண்டு 10,400 ஹெக்டேர் நிலம் பயன் பெறும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 27.1.2013.